## வாரத்தில் ஓர் முத்து!

23 ஜூன் 2009 சகரியா பூணன்

# 8. முழு அர்ப்பணத்தில் தேவனின் பூரண பாதுகாப்பு!

யோவான் 17:23-ல் இயேசு இவ்வுலகத்திற்காகவோ அல்லது மனுஷீகக் கிறிஸ்தவர்களுக்காகவோ (Carnal Chrisitans) ஜெபிக்கவில்லை. மாறாக, "எல்லாவற்றையும்" வெறுத்துவிட்டு அவரைப் பின்பற்றிய 11-சீஷர்களுக்காகவே ஜெபித்தார்! **இவர்களே,** இம்மண்ணுலக மக்களும்-மாம்ஷீகக் கிறிஸ்தவர்களும் கண்டுகொள்ள முடியாத "பிதாவின் அன்பின் பாதுகாப்பைத்" தங்கள் வாழ்வில் மெய்யாய் கண்டவர்கள்!

இன்று ஏன் அநேக கிறிஸ்தவர்கள் "மாம்ஷீகக் கிறிஸ்தவர்களாய்" இருக்கின்றனர்? ஏனெனில் பிசாசானவன், இவர்கள் தங்களைத் தேவனுக்குப் பூரணமாய் ஒப்புக்கொடாமல் "இம்மண்ணுக்குரியதையும்- விண்ணுக்குரியதையும் சேர்த்துப் பெற்றுக்கொண்டு" அதிக சந்தோஷமாய் இருக்கலாம் என அவர்களை சிந்திக்க வைத்து ஏமாற்றியிருப்பதால்தான்! ஆனால், இது ஓர் கொடிய வஞ்சகம்!! நாம் தேவனுடைய பரிபூரண அன்பை விசுவாசித்திருப்போமென்றால் "கொஞ்சம்கூட" நமக்கென்று ஏதும் "பதுக்கிக்கொள்ளாமல்" எல்லாவற்றையும் மனப்பூர்வமாய் அவருக்கு ஒப்புக் கொடுத்திருப்போம்! அப்படிச் செய்திருந்தால் *பிலிப்பியர் 4:6,7-ல்* வேதம் சொல்லுகிறது போல "எல்லா" பதட்டமான கவலைகளி லிருந்தும் நாம் "பரிபூரணமாய்" விடுதலையாகியிருப்போம்! ஆனால், மாம்ஷீகக் கிறிஸ்தவர்களோ, "எங்கே இந்தப் படகு நடுவில் புயலினிமித்தம் கவிழ்ந்துவிடுமோ" என்று எப்போதும் சந்தேகித்து சஞ்சலத்துடன் இருப்பார்கள்! பிதாவின் பூரண அன்பில் பாதுகாப்பாயிருந்த இயேசுவால், புயலினூடேயும் 'ஆழ்ந்த நித்திரையாய்' இளைப்பாற முடிந்தது. ஏனெனில் "இவ்விதமாகப்" பிசாசு தன்னை மூழ்கடிக்க ஒருக்காலும் முடியாது என இயேசு நன்றாய் அறிந்திருந்தார். ஏனெனில், அந்தப் பிதா இயேசுவை எப்போதும் கண்ணுறங்காமல் காவல் புரிகிறாரே! இவ்விதமாக, இயேசுவை நேசித்துக் காத்துக்கொண்டது போல பிதா நம்மையும் நேசித்துக் காக்கிறார் என்பதை நாம் அறிந்து கொண்டோமென்றால் இவ்வாழ்க்கையின் மகத்துவம்தான் என்னே!!

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 ) 